## 3. சரியாக மீளச் சொல்லுதலும் சுருக்குதலும்: மாற்றுகள்

3 - 9 ஆந் தரம் | 30 மணித்துளிகள்

கருவிகள்:
மீளக் கூறக்கூடிய மாதிரிக் கதைகள்

கதைகளை மீளச்சொல்லல் பொதுவாக வாழ்க்கையில் மற்றும் பள்ளி இரண்டிலும் முறையாக இடம்பெறுவதுண்டு. ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சி அல்லது ஒரு கனவு பற்றிய அறிக்கைகள் தொடக்கம் ஒரு தொலைபேசி செய்திச் சுருக்கம் வரை, பந்தியமைத்தல் தொடக்கம் முடிந்த வரையான மிக விவரமான மீட்டுருவாக்கம் வரையான பல்வேறுபட்ட வடிவங்களில் இதனைக் காணலாம், இதனூடாக நடையியற் கூறுகள் கையகப்படுத்தப்பட வேண்டும். எழுத்து நடை தொடர்பாக, மீளச் சொல்லுதலின் நன்மை என்னவெனில், மாணவர்கள் தம்முடைய தன்கதை (அது ஏற்கெனவே தரப்பட்டுள்ளது) கட்டுருவாக்கத்திலிருந்து விடுபட்டு அதனால் எழுத்துமொழிக் கூறுகளில் மட்டும் கருத்தூன்றலாம். எடுத்துக்காட்டுகளும் நடக்கக்கூடியனவும்:

- வழிகாட்டும் கருத்தாடல்: பள்ளியிலும் ஒவ்வொருநாள் வாழ்விலும் எங்கே ஏன் கதைகளை மீளச் சொல்லலும் எழுத்துருக்களைச் சுருக்குதலும் இன்றியமையாததாகின்றன என்பதை ஆராய்க. மாணவர்கள் இத்தகைய எழுத்துரு வகைகள் ஒவ்வொரு நாள் வாழ்விலும் (நகைச்சுவைக்கும் வம்புப்பேச்சுக்கும் கூட) எவ்வாறு பொருத்தப்பாடுடையதாயிருக்கும் என்பதை அறிந்திருக்கவேண்டும். அதன்பின், உண்மையான நடைமுறை வாழ்வுக் கதைகளை மீளச் சொல்லுதல் எழுத்துருக்களைச் சுருக்குதலுக்கான (கடந்த இரு நாட்களில்) எடுத்துக்காட்டுகளைத் திரட்டுக: யார் (மீளச்) சொல்லியது? என்ன? யாருக்கு?

- ஆசிரியர் வகுப்புக்கு 2 – 3 தடவை ஒரு சிறு (அல்லது நீண்ட) கதையைப் படிக்கிறார். மாணவர்கள் பின்னர் கதையினை இயன்ற அளவு மீள எடுத்துரைக்கிறார்கள், ஆனால் 1 – 2 பிழைகளை மறைக்கின்றனர். கதைகள் பின்னர் படிக்கப்பட்டு வினா கேட்கப்படுகிறது: பிழைகளை நீங்கள் கண்டுபிடிப்பீர்களா? (# 7.4 ஐயும் பார்க்க)

- முழு உளக்காட்சி மாற்றத்துடன் மீள் எடுத்துரைப்பு: மாணவர்கள் ஒரு கதையைப் படிக்கின்றனர் (எ.கா. ஒரு தேவதைக் கதை, ஒருவர் தன் இலக்கியத்திலிருந்து ஒரு புராணக்கதை அல்லது ஒரு கிளைக்கதை). கதையை அப்படியே மீளச் சொல்லுதலுக்குப் பதிலாக, மாணவர்கள் கதையிலிருந்து குறிப்பிட்ட ஒரு கதைமாந்தரின் கதாபாத்திரத்தில் தம்மை இட்டு தம் முழு உளக்காட்சியுடன் அதனை மீள எடுத்துரைப்பர். எடுத்துக்காட்டாக, "Rotkäppchen" என்னும் தேவதைக் கதையை ஓநாயின் முழு உளக்காட்சியினூடாக எடுத்துரைக்கலாம்.

- அதே கதையினை வெவ்வேறு வகையான எழுத்துரு வடிவங்களில் மீளச் சொல்லலாம்: 17.4 ஐயும் பார்க்க.

- தகவலைத் திரும்பச் சொல்லுதலும் மிகச் சிறு வடிவங்களில் சுருக்குதலும் பொதுவாக தொலைபேசிச் செய்திகளுடன் பயிற்சிசெய்வதாகும், இது சிலவேளைகளில் மாணவர்கள் தம் பெற்றோருக்குச் செய்வதொன்றாகும். இதனை விளையாட்டாகப் பயிற்சி செய்யலாம், இதன்படி ஆசிரியரும் மாணவர்களும் ஒரு தொலைபேசி உரையாடலில் பங்கேற்று பின்னர் குறுஞ்செய்தியினை எழுதுவர்

- தொடர்புள்ள, சுருக்குதல் மற்றும் குறிப்புகளிலிருந்து விளங்கிக்கொள்ளுதல் என்பவற்றிலிருந்து பெறக்கூடிய நன்மை தேர்வு எடுத்தலாகும். இது வகுப்பில் குறிப்பிட்ட எடுத்துக்காட்டுகளுடன் கலந்துரையாடி பயிற்சிக்கவேண்டும். எ.கா. மாணவர்கள் தங்களுடைய கடைசிப் பாடத்திலிருந்து மிகவும் இன்றியமையாத குறிப்புகளை எழுதலாம். பின்னர் தங்கள் விரிவுரை குறிப்புகளை ஒப்பிட்டு விமரிசித்துக் கலந்துரையாடுவர்.
  மாற்று: ஆசிரியர் விரிவுரை ஒன்றினை ஆற்றுவார் அல்லது ஒரு கல்விப் படக்காட்சியைக் காட்டுவார், பின்னர் மாணவர்கள் 10 – 15 குறிப்புகளில் மிக வேண்டிய பண்புகளைச் சுருக்கவேண்டும்.